## ஆய்வுச் சுருக்கம்.

சாய்ந்தமருது கல்விக்கோட்ட பாடசாலைகளில் ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றை மேம்படுத்துவதற்கான சித்தியடைந்த மற்றும் சித்தியடையத்தவறிய மாணவர்களது பாடசாலை, வீடு, மற்றும் தனியாள் காரணிகளினது செல்வாக்கினை ஒப்பிட்டு பின்னடைவுக்கான காரணத்தை அறிவதை நோக்காகக்கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது. பாடசாலைக் காரணிகளான: அதிபரின் போதனாத் தலைமைத்துவம், ஆசிரியர்களின் கற்பித்தல் பாங்கு, கற்றலுக்கு துணை செய்யும் சேவைகள், வீட்டுக் காரணிகளாக: சமூக பொருளாதார நிலைமைகள், பெற்றோரால் கல்விக்கான உள்ளீடுகள் வழங்கல், பெற்றோர் அறிவுமட்டம் மற்றும் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள், எனும் மாறிகளின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது கலப்புமுறை ஆய்வுவடிவமாக அமைந்துள்ளது. சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தில் உள்ள எட்டு அரச பாடசாலைகளும் மாதிரியாகக் கொள்ளப்படுகின்றது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 34 மாணவர்களும் சித்தியடையத்தவறிய 137 மாணவர்களும், அவர்களுக்கு கற்பித்த 11 ஆசிரியர்களுக்கும் வினாக்கொத்து வழங்கப்பட்டதுடன் 08 அதிபர்களும் மற்றும் சித்தியடைந்த மாணவர்களது பெற்றோர்களில் இருந்து 24 பேரும் சித்தியடையத்தவறிய மாணவர்களின் பெற்றோர்களில் 33 பேரும் நேர்காணல் செய்யப்பட்டு மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்வில் சேகிக்கப்பட்ட தகவல்கள் அட்டவணையூடாக ஒழுங்குபடுத்தி சதவீத அடிப்படையில் EXCEL, மென் பொருட்கள் பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது சித்தியடைந்த மற்றும் சித்தியடையத்தவறிய மாணவர்களுடன் ஒப்பிடப்பட்டு பொருத்தமான விமர்சனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட அனுமானங்கள் ஏனைய ஆய்வாளர்களின் ஆய்வுகளுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன் பெற்றோர்கள், பாடசாலைகள் மற்றும் மாணவர்களுக்கு ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளது. இந்த வகையில் அதிபர்கள் வகுப்பறைகளுக்குச் சென்று வினைதிறனுடைய மேற்பார்வைகளை மேற்கொள்ளல், வகுப்றையில் கற்பிக்கும் அதேஆசிரியர் மேலதிக மற்றும் மாலைநேர வகுப்புக்களையும் நடாத்துதல், ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூல்கள் மாதிரி வினாத்தாள்கள். பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல வேண்டியது பிரதான பணியாகும். ஆய்வின் முடிவிலே சித்தியடையத்தவறிய மாணவர்களது ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை அடைவுகளை மேம்படுத்த நடைமுறைகளும் செயற்பாடுகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஒரு மாணவனது பரீட்சை அடைவுக்கு அவனது பாடசாலைச்சூழல், வீட்டுச்சூழல், மாணவர்களின் தனியாள் காரணிகளும் அவற்றின் செயற்பாடுகளும் பொருத்தமானதாகத் திகழவேண்டும். அப்போது தான் அம்மாணவனால் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று தனது ஆற்றலை வெளிப்படுத்தி நிரந்தர நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

# Abstract

This research focuses on the impacts of the schools, houses and individual differences of the students that contribute to the success and failure of the students in Grade Five Scholarship examination. The leadership of the principals, the teaching methods adapted by teachers and teaching aid, social and economical status of the students, parents' education level, parents' contribution to schools and students' individual differences are considered the variables of this research. This research was done as the mix method using the qualitative and quantitative methods eight schools in Sainthamaruthu education division were taken as samples. A questionnaire was distributed among the 34 students who passed and the 137 Students who failed the scholarship examination, and the 11 teachers who taught those students. The principals of the eight schools and 24 parents of the students who passed and 33 parents of the students who failed the scholarship examination were also interviewed. The data collected were organized in Microsoft excel spread sheet. The results of the research was compared with the research by other researchers, and it has proposed suggestions to the schools, students and parents. Thus, it is proposed that the principals inspect the classrooms and observe the teaching methods, it is also proposed Thad the teachers conduct additional evening classes and make use of the teachers' guide and model papers. of Some practical solutions and practises have been mentioned to uplift the level of education of the students who failed the scholarship examination. To improve the standard of the students, their school and home environment as well as their individual differences should be positive. Then only a student can exhibit his talent in studies and have changes in his behaviour.